# *நவம்பர் புரட்சியின் நூற்றாண்டை நாடு முழுவதும் கொண்டாடுவோம்*

பி.எஸ்.என்.எல் ஊழியர் சங்கம் தனது சங்க அமைப்பு விதிகளில் சோஷலிஸ சமூகத்தை கட்டுவதில் பங்கேற்போம் என்ற அறிவிப்பை தனது குறிக்கோள்கள்களில் ஒன்றாக கொண்டுள்ளது.

இந்திய அரசியலமைப்பு சட்டம் இந்தியா ஒரு சோஷலிஸ நாடு என அறைகூவல் கொடுத்திருந்தாலும், பெரு முதலாளிகளால் வழி நடத்தப்படுகிற ஆளுகிற முதலாளித்துவ , நிலப்பிரபுத்துவ அரசு, இதைப்பற்றி அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல, பொதுத்துறைகள் கட்டகமைக்கப்பட்டதும், சேம நல திட்டங்களை கொண்டு வந்ததுமே சோஷலிஸ அமைப்பை கொண்டுவந்ததற்கு சமம் என கூறிக்கொண்டது.1991ல் தாராளமய, தனியார்மய, உலகமய கொள்கைகளை அமலாக்கத் துவங்கியதும், ஆளும் வர்க்கம், பொதுத்துறைகளையும், சேமநல கோட்பாடுகளை அழிக்கத்துவங்கியது மட்டுமல்ல பேரளவுக்காவது சோஷலிஸம் என்று பேசுவதையே கைவிட்டது: அசமத்துவம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வருகின்றது

உழைப்பு சக்தி என்பது மனித குலத்தின் தனித்தன்மை வாய்ந்த ஒரு அம்சம். வேலயில் ஈடுபடுத்தப்படும்போது தனக்கான மதிப்பை உருவக்குவது மட்டுமன்றி உபரி மதிப்பையும் உருவாக்குகின்றது. உழைப்புசக்தி உருவாக்கும் மதிப்பு ஊதியமாக வழங்கப்ப்ட்டாலும், உபரி உழைப்பு என்பது ,உற்பத்தி முறைகளின் ( நிலம், கட்டிடடம் முதலியன) சொந்தக்காரர்களாக உள்ள ஆளும் வர்க்கத்தின் பைகளில் போய் சேருகிறது: அதை உருவாக்கிய உழைப்பாளிக்ளுக்கு எதுவும் தராமலேயே. இதுதான் சுரண்டல் என் அழைக்கப்படுகிறது.

1917ம் வருடம் நவம்பர் 7ம் தேதி முதன்முறையாக ரஷ்யாவில் அப்படி ஒரு சோஷலிஸ புரட்சி ஏற்பட்டது. அப்புரட்சியில் சக்கரவர்த்தி ஜார் தலைமையிலான முதலாளிகளும் , நிலப்பிரபுக்களினால் ஆன பழைய அரசின் சக்தி நொறுக்கப்பட்டு , பதிலாக தொழிலாளி வர்க்கத் தலைமையில் விவசாயிக்ள் மற்றும் சுரண்டபப்பட்ட பிறரின் கூட்டணியில் புதிய அரசு நிர்மாணிக்கப்பட்டது. நவம்பர் 7 என்பது பழைய ரஷ்ய காலண்டரின் படி அக்டோபர் 25, எனவே இந்த புரட்சி அக்டோபர் புரட்சி என அழைக்கப்படுகின்றது. உழைப்பு சுரண்டலை முடிவுக்கு கொண்டு வருவதுதான் அதன் குறிக்கோள் ஆகும்.

ரஷ்ய புரட்சியினால் உருவாக்கப்பட்ட தொழிலாளி வர்க்க அரசு, உழைப்பின் மூலமாகிய நிலம், தொழிற்சாலைகள் முதலியவற்றை தேசியமயமாக்கி கூட்டாக மக்களுக்கு சொந்தமாக்கியது. சோவியத் சோஷலிஸ குடியரசுகளின் ஒன்றியம் (சோவியத் யூனியன்) நிர்மாணிக்கப்பட்டது. உற்பத்தி அபரிமிதமாக வளர்ந்தது. கல்லாமை, வேலையின்மை மற்றும் வறுமை முற்றாக ஒழிக்கப்பட்டது. இலவச கல்வியும் மருத்துவ வசதியும், அனைவருக்கும் கிடைக்கும் படி செய்யப்பட்டது சம உரிமை, சம ஊதியம் மகளிருக்கு பேறுகால சலுகைகளும், விவாகரத்து உரிமையும் வழங்கப்பட்டது. மகளிருக்கும் வாக்குரிமை அளித்த முதல் நாடு இதுதான். கடுமையானதும், சலிப்பூட்டுவதுமான வீட்டு வேலைகளில்

இருந்து பெண்களை விடுவித்து , அதில் 90 சதமானத்தை சமூகமே ஏற்றுக்கொள்ளும் படி செய்தது. ஆண்களும் வீட்டு வேலகளை பங்கிட துவங்கினர்..,

இந்த சோஷலிஸ புரட்சி இந்தியா உட்பட பல நாடுகளின் உழைக்கும் வர்க்க போராட்டங்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்த்டியது. இந்த தாக்கத்தினால், 1920ல் இந்தியாவில் AITUC, என்கிற முதல் தொழிற்சங்க மையம் உருவாக்கப்பட்டது. தொழிலாளி வர்க்க, விவசாயிகளின் கூட்டணி பல நாடுகளில் ஆட்சிக்கு வந்தன. இந்தியா உட்பட பல நாடுகளின் விடுதலை போராட்டங்களில் இது தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்திய சுதந்திர போராட்டத்தை முன்னெடுத்து சென்ற காங்கிரஸ் கட்சியானது, உழுபவனுக்கே நிலம், சோஷலிஸம், சேம நல அரசு ஆகியவற்றை பேச துவங்கியது..முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் ஆளும் வர்க்கம், உழைக்கும் வர்க்கத்திற்கு பல்வேறு சேம நல திட்டங்களை பின்பற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இரண்டாம் உலகப் போரில் சோவியத் யூனியன் தலைமையில் .பாசிஸத்தை தோற்கடித்த பின்பு இது வரையில் மூன்றாம் உலகப் போர் என்பது இல்லை.. இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளின் முன்னேற்றத்துக்கு அது உதவியது.

ஆனால் சாஷலிஸ்த்தை கட்டும் இந்த முயற்சி தோல்வியடைந்து , சோவியத் யூனியனால் தலைமை தாங்கப்பட்ட சோஷலிஸ முகாம் சீர்குலைந்து, அந்த நாடுகளில் எல்லாம் முதலாளித்துவம் மீண்டும் கொண்டு வரப்பட்டது. முதல் சோஷலிஸ சமூகம் அமைப்பதில் ஏற்பட்ட தவறுகள் தான் இதற்கு காரணம். எந்த முதல் சோதனையும் இறுதி வெற்றிக்கு உத்தரவாதம் தர இயலாது, ஆனால் தவறுகளில் இருந்து கற்றுக்கொண்ட பின்பு இறுதியாக அது வெற்றி பெறும்.

சுரண்டல், அசமத்துவம், வறுமை, கல்லாமை, வேலையின்மை சுயநலம், இனங்களுக்கிடையே மோதல், யுத்தம், பெண்கள் மற்றும் சிறுபான்மையினருக்கு எதிரான பாகுபாடு, இனம், பால், மதம், ஜாதி இவற்றின் பெயரால் நடக்கும் ஒடுக்குமுறைகள் ஆகிய இந்த அடிப்படையான பிரச்னைகளை முதலாளித்துவம் தீர்க்க முடியாது என்பது எந்த சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. தற்போது ஒட்டு மொத்த உலக முதலாளித்துவமும் ஒரு நீடித்த பொருளாதார மந்தத்தை எதிர் நோக்கியுள்ளது. , அதன் விளைவாக தொழிலாளி வர்க்கத்தின் மீது துன்பங்களை குவிக்கிறது என்பது மட்டுமல்ல, சுற்று சூழலை அழிப்பதன் மூலம் பூமியையே உடல் நலத்துடன் வாழ பாதுகாப்பான இடமாக இல்லாமல் ஆக்கிவிட்டது.

.ஆனால் தவிர்க்க இயலாத தவறுகளால் பரிசோதனையில் தோற்றாலும் மேற்சொன்ன மனிதர்களின் அடிப்படையான பிரச்னைகளை அது மட்டுமே தீர்க்க முடியும் என்பதை சோஷலிஸம் நிரூபித்துள்ளது. எனவே 2016 நவம்பர் 7 முதல், அக்டோபர் சோஷலிஸ புரட்சியின் நூற்றாண்டு துவங்கும் இச்சமயத்தில் , 31-12-2016 முதல் 3-01-2017 வரை சென்னையில் நடைபெற்ற BSNLEU வின் அகில இந்திய மாநாடு , விஞ்ஞான சோஷலிஸத்தின் தாத்பரியத்தையும் , பல நாடுகளின் தவறுகளில் இருந்து திருத்திக் கொண்டு சிறந்த வழியினில் இந்தியாவில் அதை கட்டுவது பற்றியும் BSNL ஊழியர் மத்தியில் பிரச்சாரம் செய்வது என தீர்மானிக்கிறது. இந்த பிரச்சாரம் 6-11-2017 தேதி வரை நாடு முழுவதும், கருத்தரங்கங்கள் , கூட்டங்கள், வகுப்புக்கள், சோஷலிஸம் குறித்த நோட்டீஸ்கள் மற்றும் புத்தகங்கள் வழங்குவது ஆகிய முறைகளில் நடத்துவது என தீர்மானிக்கிறது.